ஆக்கம்: ஆசிரியை K. கிருஷ்ணவேனி
கே/ சாந்த மரியாள் தமிழ் மகா வித்தியாலயம்

Department of Education, Sabaragamuwa Province/ Weekly School

## பகுதி ~ I

## உமாபதி சிவாசாரியார்

1. புறச்சந்தான பரம்பரையில் நான்காமவர் யார்?
   I. மெய்கண்ட தேவர் II. அருணந்தி சிவாசாரியர்
   III. மறைஞான சம்பந்தர் IV. உமாபதி சிவாசாரியர்
2. உமாபதி சிவாசாரியரை " கொற்றவன் குடி முதலியார்" என்றழைத்ததன் காரணம்
   I. தில்லைவாழ் அந்தணர்களுள் ஒருவர் II. கொற்றவர் குடியில் வசித்தமை
   III. புறச்சந்தான் பரம்பறையினர் IV. வேத சிவாகமங்களை கற்று தெளிந்தவர்
3. உமாபதி சிவாசாரியார் வாழ்ந்த காலம்
   I. கி.பி. 14ம் நூற்றாண்டு II. கி.பி. 15ம் நூற்றாண்டு
   III. கி.பி. 13ம் நூற்றாண்டு IV. கி.பி. 10ம் நூற்றாண்டு
4. சித்தாந்த அட்டகம் எனும் தொகுதியில் அடங்கும் நூல்
   I. திருவருட்பயன் II. சிவஞானபோதம் III. இருபா இருப.்.து IV. சிவஞான சித்தியார்
5. சிவஞான போதத்தின் சார்பு நூல்
   I. உண்மை நெறி விளக்கம் II. சிவப்பிரகாசம் III. வினா வெண்பா IV. கொடிக்கவி
6. சித்தாந்த அட்டகம் எனும் தொகுதியில் அடங்கும் நூல்
   I. சிவப்பிரகாசம் II. நெஞ்சு விடு தூது III. திருவருட்பயன் IV. சங்கற்ப நிராகரணம்
7. சிதம்பரத்தின் கோயில் வரலாற்றினைக் கூறும் நூல்
   I. திருத் தொண்டர் புராணம் II.பௌட்கராகம வடமொழி வியாக்கியானம்
   III. கோயிற்புராணம் IV. சேக்கிழார் புராணம்
8. ஏறாத கொடியை ஏற்றுவதற்காக உமாபதி சிவாச்சாரியார் பாடிய பதிகம்
   I. கொடிக்கவி II. கோயிற் புராணம் III. திருப்பதிகக்கோவை IV. திருமுறைக்கண்ட புராணம்
9. உமாபதி சிவாசாரியர் தீட்சை வழங்கியது
   I. பெற்றாள் சாம்பான் II. பெற்றான் சாம்பானுடைய மனைவி III. அரசன் IV. மாணவர்கள்
10. உமாபதி சிவாசாரியாரின் குரு பூஜைத்தினம்
    I. சித்திரை அத்தம் II. வைகாசி மூலம் III. மார்கழி மகம் IV. ஆடிச்சுவாதி

## பகுதி ~ II

**விடை எழுதுக.**

1. கொற்றவன் குடி முதலியார் என அழைக்கப்படுபவர் யார்? அவ்வாறு அழைப்பதற்கான காரணம் யாது ?
2. சித்தாந்த அட்டகத்தை எழுதியவர் யார்? அவற்றுள் அடங்கும் நூல்கள் எவை?
3. உமாபதி சிவாசாரியார் உருவாக்கிய சைவசமயம் சார்ந்த வேறு நூல்களைக் குறிப்பிடுக?
4. உமாபதி சிவாசாரியார் தனது குருவின் அதிதீவிர பக்குவ நிலையை எவ்வாறு வெளிக்காட்டினார்?
5. உமாபதி சிவாசாரியாரை தில்லை நடராஜப் பெருமாளை பூசிக்க விடாததன் காரணம் யாது?
6. உமாபதி சிவாசாரியாரின் கோயிற்புராணம் எவ்வாறு அரங்கேற்றப்பட்டது?
7. உமாபதி சிவாசாரியார் யார் யாருக்கு தீட்சை வழங்கினார்?
8. திருவாவுடுதுறை ஆதீனத்தை தாபித்து வந்தவர் யார்? இவர் யாருடைய சீடர்?
9. திருவருட்பயன், சங்கற்ப நிராகரணம் ஆகிய நூல்களின் சிறப்பினைத்தருக?
10. சேக்கிழார் வரலாற்றினையும், பெரிய புராணத்தை சுருக்கி கூறும் நூலினையும் கூறுக?